ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

'உழவுக்கும் அக்னிஹோத்திரத்திற்கும் ஒத்துவராது' என்று ஓர் பழமொழியுண்டு. இதனால் ஒரேமனிதன் ஒரேகாலத்தில் ஒன்றற்கொன்று முரண்படக்கூடிய காரியங்களைக் கெவனிக்கமுடியாதென்று ஏற்படுகின்றது. அப்பேர்ப்பட்ட காரியங்கள் அவசியம் நடைபெறவேண்டுமானால் அததற்குத்தகுந்த மனிதர்களைக்கொண்டு நடத்தவேண்டும். ஒருவனே நடத்தமுடியாது. அதற்காகவேதான் நமது சாஸ்திரங்களில் அதிகாரிகளைப் பற்றிய விசாரம் செய்யப்பட்டிருக்கின்றது ஆகவே வைதிககர்மங்களில்அதிகாரிகளாகக் குறிப்பிடப்பட்டவர்கள் பிரதானமாய்அவைகளைத்தான்செய்யமுடியுமேயன்றி மற்ற லௌகிககர்மங்களைக்கெவனிக்கமுடியாது. வைதிகர்மங்களில் அதிகாரம் பெறாதவர்கள் தான் லௌகிககாரியங்களைகெவனிக்க முடியும்செய்யவும்கூடும். தற்காலம் நம் நாட்டில் இராஜீயமானசில இயக்கங்கள் நடந்துவருகின்றன.அவை பெரும்பாலும் லௌகிகப்பிரதானமாயிருக்கின்றபடியால் அவைகளில் வைதிகர்கள் தலையிடுவது தகாதகார்யமாகும். ஆனால் தற்போது வைதிகர் குலத்திலுதித்தவர்களும் வைதிகாசாரத்தில் வெருப்படைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும் கிராமாந்தரவாஸிகள் வைதிகாசாரத்தைக் கைவிடத்துணிவடையவில்லை. முன்போல் வைதிகாசாரம் கிராமாந்தரங்களிலும் நடக்கவில்லையென்றாலும் அனேகமாய் தர்மங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றனவேயன்றி அடியோடு அழிக்கப்படவில்லை. ஹவ்யகவ்யாதிகள் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதில்சிலருக்கு சம்சயமுண்டாகின்றது.அதைப்பெரியாரிடம் கேட்டுத் தீர்மானித்துக்கொண்டு நடத்துகிறார்கள். தனித்தனியே ஒவ்வொருவருமனுபவிக்கவேண்டிய பயனுக்கும், பொதுவாய் எல்லோருமனுபவிக்கவேண்டிய பயனுக்கும் அவரவர்களுக்குரிய கர்மானுஷ்டானந்தான் காரணமென்று சாஸ்திரம் கூறுவதால் வைதிகர் வைதிகாசாரத்தைச் செய்து பொதுவான கார்யத்திலீடுபடவேண்டும். பொதுக்கார்யத்திலீடுபட்ட லௌகிகர்கட்கும் தைவவழிபாடு முதலிய கார்யங்களில் வைதிகருடைய அபேக்ஷை வேண்டியதுதான். அதாவது அதிருஷ்டரூபமான உபகாரம் வைதிகர் மூலமாகத்தான் கிடைக்கக்கூடும். லௌகிககார்யத்தின் திருஷ்டப்பயன் வைதிகருக்கும் வேண்டியதுதான். ஆகவே வைதிகரும், லௌகிகரும் அவரவர்கள் கார்யத்தைச்செய்து ஒத்துழைத்து ஸ்வராஜ்யபர்யந்தமான புருஷார்த்தங்களையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ சித்திரை-௴ ௧௰௨

## இவ்வருஷத்தின் பெயரென்ன?

"ப்ரமோத" என்று தான்.

இத்தலையங்கமிட்ட ஓர் சங்கை கிருஹயக்ஞ ப்ரம்மஸ்ரீ உமாமஹேசுவர சாஸ்திரிகள் அவர்களால் கேழ்க்கப்பட்டிருக்கிறது. அது வேறிடத்தில் போடப்பட்டிருக்கிறது. அதற்கு ஸமாதானமிது—வைதிகமான கர்மங்களில் வேதமந்திரங்களைத்தவிர ஸங்கல்பாதிகளில் உபயோகப்படுத்தப்படும் பாஷை தேவபாஷையாகிய ஸம்ஸ்கிருதபாஷையே தவிர வேறு பாஷையில்லை. ஆகையால் கர்மாங்கமாகிய தேவர்களின் பெயர், திரவியங்களின்பெயர், காலங்களின்பெயர் இவைகளெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையில் வழங்கப்படுவது போலவே கிரஹிக்கவேண்டுமேயன்றி வேறு பாஷையில் வழங்கப்படுவதுபோல் உபயோகிப்பது வழக்கமில்லை. உதாரணமாக— 'மேஷ' என்பதை 'மேட' என்று தமிழில் பாஷாலக்ஷணப்படி வழங்குவார்கள். 'ராசி' என்பதை 'இராசி' என்பார்கள். ஆயினும் கர்மாக்களில் 'அசுவினீநக்ஷத்ரே மேஷராசௌ ஜாதஸ்ய' என்று சொல்லுவதைவிட்டு 'மேடவிராசியில்" என்று சொல்லுவதில்லை. அன்றியும் கர்மங்களின் பெயர்களெல்லாம்ஸம்ஸ்கிருதபாஷையிற்றானுள்ளதேயன்றி வேறு பாஷைகளிலில்லை. ஸம்ஸ்கிருதபாஷையிலிருந்து அந்தப்பெயர்கள்வேறுபாஷையிலிறக்கப்பட்டாலும் அந்த பாஷைப்படி எழுத்துமாத்திரம் மாறலாமேயல்லது அதன் சொரூபத்தை மாற்ற முடியாது. ஆகவே, பிரகிருதத்தில் வருஷங்களின் பெயர்கள் ஆதிமுதற்கொண்டு தேவபாஷையிற்றான் அனேகக்ரந்தங்களில் வியவஹரிக்கப்பட்டு வருகின்றன. ஸம்ஸ்கிருதபாஷையிலும் சுலோகங்களாகவே வருஷப்பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த பாஷையில் சுலோகங்களாகச் சேர்ப்பதில் சுலோகபூர்ணத்திற்காக நடுவில் ச, து, அத, என்பாதிகள் சேர்க்கப்படுவதுண்டு.

“ प्रभवो विभवः शुक्लः प्रमोदोऽथ प्रजापतिः ”

என்றவிடத்தில் 'ப்ரமோத:' என்றதற்கும் 'ப்ரஜாபதி:' என்றதற்கும் நடுவில் अथ என்று போடப்பட்டிருக்கிறது. இந்த சுலோகத்திலுள்ள பெயர்களைத் தமிழெழுத்தில் எழுத்திலெழுதியவர் இதனைத்தெரிந்துகொள்ளாமல் 'ப்ரமோதோத' என்று எழுதியிருக்கலாம். அது நாளடைவில் 'ப்ரமோதூத' என்று மாறியது போலும். இதுபோலவே परिधावी प्रमादी च என்றதிலும் ப்ரமாதி யென்றதோடு அந்த வருஷப்பெயரென்று தெரிந்துகொள்ளாமல் 'ப்ரமாதீச' என்று எழுதியிருக்கலாம். அதனால் 'ப்ரமாதீச' வென்றே வழங்கத்தலைப்பட்டார்கள். ஸாமான்யஜனங்கள் எப்படி வழங்கிவந்தாலும் பஞ்சாங்கம் போடுகிறவர்களாவது அந்தப்பெயரை ஸம்ஸ்கிருதபாஷாபுஸ்தகத்திலிருந்து தெரிந்துகொண்டுபஞ்சாங்கங்களில் போட்டால் நலமாயிருக்கும். ஸாமான்யஜனங்கள் தப்போ தவறோ சொல்லிக்கொண்டு வருவதை பஞ்சாங்கத்திலும் போடுகிறவர்கள் ஸம்ஸ்கிருதபாஷையைக் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்களென்று தோன்றுகின்றது. அப்பேர்ப்பட்டவர்கள்தான் தர்மசாஸ்திரத்தில் கண்டபடி திதிநிர்ணயம்செய்துபோடுகிறார்களென்றால் அது எவ்வளவு சுத்தமாயிருக்குமென்பதை ஆஸ்திகர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது. இதில்சிலது சங்கை— प्रमोदूतः என்றே பெயரிருக்கக் கூடாதா என்று.

அப்படியும் இருக்கலாம். அப்படியுள்ள பாடம் ஒரு கிரந்தங்களிலாவது காணப்படவில்லை. அதனாலப்படியிருக்க நியாயமில்லை. சாஸ்திரிகளவர்கள் இந்தப்பெயரைக் கூறும் கிரந்தங்களை நிர்ணயஸிந்து முதலியனவென்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதன்றியும் ஒவ்வொரு ஸம்ஹிதாகிரந்தங்களிலும் வருஷப்பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் प्रमोदोऽथ என்றோ அல்லது प्रमोदूतः என்றோ என்று ஸந்தேகப்பட இடமில்லாமல் கூறப்படுகின்றது. உதாரணமாக வாராஹமிஹிராசாரியாரியற்றிய பிருஹத்ஸம்ஹிதையில் பிருஹஸ்பதிசாரத்தில் 60-வருஷங்களின் பெயரைக் கூறும்பொழுது பிரபவ என்ற முதல் வருஷத்தைக் கூறிவிட்டுப் பிறகு

तस्मात्द्वितीयो विभवः प्रदिष्टः शुक्लस्तृतीयः परतः प्रमोदः

என்று 'ப்ரமோத:' என்று ஸ்பஷ்டமாய் கூறியுள்ளார். இது போலவே நாரதஸம்ஹிதை, கர்க்கஸம்ஹிதை முதலியவைகளி

னும் காண்க. காலவிதான சாஸ்திரமாகிய சோதிடசாஸ்திரம் இக்கலியில் கேழ்பாற்றுக் கிடக்கிறது. ஆயினும் ஆஸ்திகர்கள் ஆராய்ந்துபார்த்துத் தெரிந்துகொண்டு உள்ளபடி காலப்பெயரைச் சொல்லி கர்மாநுஷ்டானம் செய்வார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

---

# இவ்வருஷத்தின் பெயரென்ன?

இவ்வருஷத்தின் பெயரை பெரும்பாலாக 'பிரமோதூத' என்றே வழங்குகின்றனர். ஆனால் அப்படிச்சொல்வது நியாயந்தானா? அன்றேல் வேறுவிதமாகக்கூறவேண்டுமா என்று ஆலோசிக்கப்புகின் வேறுவிதமாகச்சொல்வதே உசிதமென்று தோன்றுகிறது. அதாவது வருஷங்களின் பெயர் இடுகுறியேயன்றி காரணமில்லை. காரணமில்லாவிடின் இதுவும் ஓர் இடுகுறியாக ஆகலாமே என்றால் முதலில் பெயரிட்டவரின் அபிப்பிராயத்திற்கு விரோதமில்லாமலிருக்கவேண்டுமல்லவா? அவர்களின் அபிப்பிராயத்தை ஆராயப்புகின் கீழ்க்கண்ட சுலோகத்தைக்கவனிக்கவும்.

" प्रभवो विभवः शुक्कः प्रमोदोऽथ प्रजापतिः "

என்கிற கோர்வை சுலோகங்கள், நிர்ணயஸிந்து ஜாதகசிந்தாமணி முதலிய கிரந்தங்களில் இருக்கின்றன. இதனால் "பிரமோத" என்று ஏற்படுகிறதே தவிர பிரமோதூத என்று ஆகவில்லை. ஸம்ஸ்க்ருதத்திலுள்ள அப்பதத்தை தமிழில் இரக்குங்கால் अथ என்பது சேர்ந்து பிரமோதூத என்றாயிற்று. இம்மாதிரியே प्रमादी வருஷமும் பிரமாதீசவாயிற்று. ஆகையால் தேவபாஷையால் ஸ்வதர்மானுஷ்டானம் செய்கிறவர்கள் தேவபாஷையான "பிரமோதநாம ஸம்வத்ஸரே" என்றே சொல்லவேண்டியதே யுக்தமென்று ஏற்படுகிறது.

प्रमोदान्ते प्रमोदन्ते तथापि निखिलाजना:

என்கிற பிரயோகமும் வர்ஷபலத்தில் காணப்படுகிறது. முன்பு परिधाविया? परीतापिया என்று மஞ்சுபாஷிணீபத்திரிகையில் அடியேன் செய்த பிரச்னத்திற்கு परिधावीதான் நியாயமென்று பத்திராதிபர் நிரூபத்தால் நிச்சயமாயிற்று. லோகவியவஹாரத்திற்குப்

பிரமோதூத என்பதை ஆக்ஷேபிக்கவில்லை. வருஷாரம்பத்திலே யே இந்த சங்கையை ஸமாதானம் செய்யப் பண்டிதர்களை வேண்டுகிறேன்.

'திருஹ்யக்ஞ' வீ. உமாமகேச்வரசாஸ்திரி.

---

# வரருசி.

(134-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதம் ஜாக்கிரதையுடன் வரருசியால் அரசாங்கம் கவனிக்கப்படும்போது, அந்தப்புரத்தில் சிற்றின்பத்தில் மூழ்கி ஜடனான நந்தன், ஜன்னலின் மேல்பாகத்திலிருந்து, உயரே முகத்தை நோக்கின ஓர் பிராம்மணனைப் பார்க்கின்ற பட்டமஹிஷியைக் கண்டு, விவேகத்திற்கு எதிரிடையான ஈர்ஷ்யா குணத்தால் கலங்கின மனங்கொண்டவனாய் அந்தப்பிராம்மணனை வதை புரியும்படி கட்டளையிட்டான். அரசனது கட்டளையால் பிராம்மணன் கொலைக்களம் கொண்டுபோகப்படும்போது, கடைத்தெருவின் நடுவில் உயிர்துறந்திருந்தபோதிலும் அங்கு உயர்த்தப்பட்டிருந்த ஒரு மீன் சிரித்தது.

யோகநந்தன் அதையறிந்து பிராம்மண வதத்தைத் தடுத்து, வரருசியைப் பார்த்து 'மச்சம் நகைப்பதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டான். பிறகு வரருசியால் நினைத்தமாத்திரத்திலேயே தென்பட்ட ஸரஸ்வதி தேவியானவள் வரருசியைப் பார்த்துச் சொல்லலானாள்—

'குழந்தாய்! இரவில் இந்த சிறிய மரத்தின் பக்கத்தின்கீழ் மறைந்திரு, மச்சம் நகைத்ததின் காரணத்தைக் கேட்கப்போகிறாய்' என்று. அப்படியே மந்திரி அங்கு இருந்துகொண்டே, சிறுகுழந்தைகளோடு அங்கு வஸிக்கத்தங்கின கோரமான ராக்ஷஸ ஸதிரீயைக் கண்டார். தின்பண்டந்தா என்று கேட்கும் அப்பிள்ளைகளை உச்சிமுகர்ந்துகொண்டு அவ்வரக்கி 'காலையில் பிராம்மணனுடைய இறைச்சிகளைத் தரப்போகின்றேன். இப்போது அவன் வதைக்கப்படவில்லை' என்று சமாதானப்படுத்தும்போது 'என் அவன் இன்றையதினம் கொல்லப்படவில்லை' என்கவே, அவனைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகும்போது 'இறந்தி

ருந்தபோதிலும் ஒரு மீன் நகைத்தது' என்று சொல்லவே, மறு
படியும் அந்த ராக்ஷஸக் குழந்தைகள் 'அதன் காரணம் என்ன ?'
என்று கேட்டன. அப்போது ராக்ஷஸிகூறியதாவது— 'பிள்ளை
களே அரண்மனையில் ராஜஸ்திரீகள் யாவருமே கெட்ட நடத்தை
யுள்ளவர்கள். அங்கு எங்கும் பெண்வேஷம்பூண்டு புருஷர்கள்
ரஹஸ்யமாய் சஞ்சரிக்கின்றனர். இதையறியமாட்டாமல் குற்ற
மற்ற பிராம்மணனைக் கொலைசெய்யத் துணிகிறான். இந்த
மூடனே இதையறியமுடியாமல் தானும் விடனாய் இருக்கிறான்'
என்று மீன் நகைத்தது—— என்று. அதையறிந்து வாருசி,
காலையில் யோகநந்தனின் பொருட்டுச் சொன்னான். அவனும்
ஸ்திரீவேஷம் பூண்ட புருஷர்களைத் தேடிக்கொன்றான்.

இவ்விதம் அரசன் கட்டுத்தடங்கலில்லாமல் துர்மார்க்கியாய்
காலந்தள்ளும்போதும், அவ்விதமான ராஜனுடைய ஸேவையை
வாருசி வெறுக்கும்போதும் தேர்ச்சிபெற்ற ஒரு சித்திரகாரன்
கொலுமண்டபத்தையடைந்து யோகநந்தனுடையவும், பட்ட
மஹிஷியினுடையவும்படத்தையும்வரைந்து,சந்தோஷித்தராஜனிட
மிருந்து ஏராளமான செல்வத்தைப்பெற்றான். ஒரு சமயம் அர
சனைப் பார்க்க உள்ளே நுழைந்த வாருசி, ஓர் புறத்தில் அந்தசித்
திரத்தைக்கண்டு, ஸகல லக்ஷணங்கள் பொருந்தின பட்டமஹி
ஷிக்கு மற்றொரு லக்ஷணம் அமைக்கப்படவேண்டும் என்று
ஊஹித்து, வர்ணக்குச்சியால், அவள் ஒட்டியாணம் போட்டுக்
கொள்ளுமிடத்தின் பக்கத்தில் ஒரு பொட்டு எழுதினான். மறு
நாள் யோகநந்தன் அந்த திலகத்தை உற்றுநோக்கி, வாருசியால்
எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று அறிந்து புத்தி மயங்கினவனாய்
நிச்சயமாகவே இந்த வாருசியின் நடத்தைப் பிசகானது, எனது
அந்தப்புரஸ்திரீகளைக் கெடுக்கிறான். ஆகையால் தான், இவனால்
அந்தப்புரத்தில் பெண்வேஷம்பூண்ட புருஷர்கள் அறியப்பட்டார்
கள் என்று நிச்சயித்து,கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டு,கெட்ட
நடத்தையுள்ள இந்த வாருசி கொல்லப்படட்டும் என்று சகடால
னுக்குக் கட்டளையிட்டான். மிக்க மேதாவியான அந்த சகடா
லனே இவ்வாறு யோசிக்கலானான். 'இந்த வாருசி சிறந்த புத்தி
யுள்ளவனும், எனது தீங்கை விலக்கினவனுமாகிறான், இவனைக்
கொல்வதற்கு தேவர்களாலும் அஸுரர்களாலுமே முடியாது.
அப்படியிருக்க மாளிட்டால் எங்ஙனம் கூடும் என்று. இவ்வாறு

யோசித்து தனது வீட்டில் மறைவாய் வரருசியைஇருக்கச்செய்து நந்தனையணுகி, 'மஹாராஜனே தங்களது கட்டளை நிறைவேற்றப்பட்டது' என்று சந்தோஷப்படுத்தினான்.

இப்படி வெகுநாட்கள் செல்லுகையில், யோகநந்தனுக்கு பட்டமஹிஷியினிடத்தில் ஜனித்த ஹிரண்யகுப்தன் என்ற குமாரன் இளமைப்பருவம நீங்கி, பதினெட்டுவயது சற்றேறக்குறைய நிரம்பி, யௌவனப்பருவமடைந்தான். அவன் தகப்பனாலும், தாயாராலும் தடுக்கப்பட்டபோதிலும் அசட்டை செய்து, வேட்டையில் ஆவல்கொண்டு குதிரை மீதேறி, ஆப்தர்கள் சிலரால் பின்தொடரப்பட்டவனாய், பெருங்காட்டில் நுழைந்தான். ஒருவனாகவே ஒரு காட்டுப்பன்றியை விரட்டிக்கொண்டு, வெகுதூரம் சென்றான். ஒரு நாளும் சென்றுவிட்டது. பெருமிருட்டாய் தோன்றும் காட்டில் சத்தமிடுகின்ற சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டதாலேயே நடுங்கின ராஜகுமாரன், ஓர் பெரிய மரத்தில் ஏறிக்கொண்டான்.

பிறகு அதற்கு கணநேரத்திற்கு முன்பே தன்னை விரட்டின சிங்கத்தினிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கு, ஒரு கரடி அம்மரத்தில் ஏறியிருந்தது. பயத்தால் நடுங்கிக்கொண்டு சமீபம் வருகின்ற அவனைக்கண்டு மடியில்வைத்து 'தோழனே பயப்பட வேண்டாம்'என்று அக்கரடி மானிட வார்த்தையால் அவனைச்சந்தோஷப்படுத்திற்று.

பிறகு மடியில் அச்சம் நீங்கி, உறங்குகின்ற அவனைக் கீழே தள்ளிவிடு என்று அடிக்கடி சிங்கம் வேண்டினபோதிலும் கரடி அவனைத் தரையில் தள்ளுவதற்கிசையவில்லை. பிறகு ராஜகுமாரன் விழித்துக்கொண்டதும் கரடி அவனுடைய மடியில் படுத்து உறங்கிற்று. சிங்கத்தால் கரடியைத் தள்ளிவிடு என்று அடிக்கடி சொல்லப்பட்டபோது, அந்த ஹிரண்யகுப்தன் தயையில்லாமல் பூமியில் தள்ளினான். தெய்வச்செயலாய் அத்தருணம் விழித்துக்கொண்ட கரடி, அவனால் தள்ளப்பட்டும் கீழேவிழாமல் ஓர் கிளையைப் பற்றிக்கொண்டு, கோபத்துடன் நன்றிகெட்டவனே ! இக்கொடூரமான காரியம் வெளிப்படும் வரை பைத்தியமுள்ளவனாவாய் என்று சபித்தது. காலையில் அரசன் ஸைன்யங்களைக் கொண்டு அங்குமிங்கும் திரிந்து அழைத்துவரப்பட்ட குமாரன்

உன்மத்தனாய் இருப்பதைக்கண்டு வருத்தங்கொண்டு அதை நீக்க முடியாமல் 'இப்போது வாருசியிருந்தால் உன்மாதத்தின் காரணத்தை அறியமுடியும். அசட்டுத் தனமாய் அவனைக் கொலைசெய்த என்னை நிந்திக்கவேண்டுமென்று வெருத்துக்கொண்டான். அப்போது பக்கத்தில் நின்ற சகடாலன், சந்தோஷம! வாருசியை வெளிப்படுத்துவதற்கு சமயம் நேர்ந்தது என்று சிந்தித்து, அரசனால் அபயமளிக்கப்பட்டு தேவனே! 'மகாமேதாவியான வாருசி உயிருடன் எனது கிருஹத்திலேயே ரக்ஷிக்கப்பட்டு வருகின்றான்' என்று அறிவித்து, அவனது கட்டளையாலேயே ஏகஸந்தாக்ராஹியான एकसन्ताग्राहि யான அவனை வெளியில் வரச்செய்தான். வந்த மறு க்ஷணத்திலேயே 'ராஜகுமாரனின் சித்தவிகாரத்திற்கு என்ன காரணம்' என்று யோகநந்தன் கேட்கவே, வாருசி குமாரனை உற்றுப்பார்த்து. 'இவனால்மித்திரத்ரோகம் செய்யப்பட்டது. அதன் பயன் இவனால் அநுபவிக்கப்படுகிறது' என்று ஸரஸ்வதீ தேவியின் அநுக்ரஹத்தால் அறிந்து சொன்னான். உடனே பைத்தியம் நீங்கின ஹிரண்யகுப்தனால், ஜனமில்லாத காட்டில் நிகழ்ந்த வரலாறு ஒன்றும் விடாமல் கூறப்பட்டது. ஆச்சர்யங்கொண்ட அரசன் 'எவ்வாறு உன்னால் அறியப்பட்டது' என்று கேட்கவே, வாருசி ராஜனே! புத்திமான்களின் புத்தியானது லக்ஷணம், அநுமானம், பிரதிபாசக்தி இவைகளால் சொல்லப்படாத விஷயத்தையும் அறியப்படுத்தும். முன்பு அத்தன்மையையுடைய புத்தியாலேதான் திலகமும் முன் அறிந்து எழுதப்பட்டது என்றான். லஜ்ஜையாலும், அநுதாபத்தாலும் மௌனம் ஸாதித்தவனை யோகநந்தன் அவனுக்கு மேலான மரியாதைகள் செய்யவே, தன் நடத்தை சுத்தமாய் இருப்பதாலேயே தன்னை அதிர்ஷ்டசாலியாகக் கருதின, உபகோசையின் கணவனான வாருசி, வைராக்கியங்கொண்டு, 'மிகவும் அழிவுள்ள ராஜாவின் அநுக்ரஹம் வேண்டாம்' என்று சிந்தித்துக்கொண்டு தன் வீடு சேர்ந்தான்.

மாப்பிள்ளை வந்ததைச் செவியுற்று பேரானந்தங்கொண்ட உபவர்ஷர், வாருசியை நோக்கி, 'வித்வானே! உன்னைக் கொலை செய்துவிட்டார்கள் என்று கேழ்வியுற்று, பதிவிரதாமணியும் எனது செல்வக் குமாரியுமான உபகோசை சோகாக்கினியால் எரிக்கப்பட்டவளாய்,' ஓய்வில்லாமல் பெருகின துக்கக்கண்ணீ

ரால் கலங்கின கண்ணுள்ளவளாய்க்கொண்டு என்னல்சமாதானப் படுத்தப்பட்டும் அதைப்பொருட்படுத்தாமல் அக்கினியில் பிரவே சித்துவிட்டாள். கிழத்தனத்தால தளர்ந்த தேஹமுள்ள உனது தாயாரும் 'ஹா, காத்தியாயனனே! ஹா ஒரு தடவை செவி யுற்றதை உணரும் சக்தி வாய்ந்த செல்வக் குமாரனே!' என்று ஓய்வில்லாமல் புலம்பும்போது அவளது ஹ்ருதயம் தானகவே சித றிப்போயிற்று என்று கூறிவிட்டு உரக்கப் புலம்பத்தொடங்கினர்.

வாருசி இதைச் செவியுற்றதும், புதிதாக ஏற்பட்ட சோகத் தின் வேகத்தால் பிரக்ஞை இழந்து வேரறுபட்ட விருக்ஷம்போல் தரையில் விழுந்தான். பின்பு வெகுநேரம் கதறினன். 'இஷ்ட பந்துக்களின் நாசத்தாலேற்படும் சோகாக்னி யாரைத் தான் கொளுத்தாது?'

பிறகு வாருசி அவ்விதமான அவஸ்தையுடனிருப்பதைக் கேட்டு, வர்ஷோபாத்தியாயர் விரைவாய் அங்குவந்து இவ்வாறு சொல்லலானர்—'குழந்தாய் மகாமேதாவியே! பிராகிருத ஜனம் போலவும் தர்மநுட்பமறியாதவன்போலவும், உலகசமாசாரமறி யாதவன்போலவும், கற்றவனில்லாதவன்போலவும், துக்கத்திற் காளான தன்னைத் தடுத்துக்கொள்ளவில்லை. பிறந்தது முதற் கொண்டு சோகாசம் என்பதை நீ அறியாதவனென்பது உண்மை. இதுவும் உனது வைராக்யத்தைத் திடப்படுத்துவதற்கு உன்னல் ஆராதிக்கப்பட்ட தெய்வத்தின் செயலே. ஆகையால் தைரியம் அடையப்படட்டும். ஆத்மா அடக்கப்படட்டும். உலகத்தின் உண்மை விசாரிக்கப்படட்டும். இவ்வுலகில் சம்சாரம் அழிவுள்ள தென்பதே நிலையுள்ளது. ஆகையால் இந்த ஈசனின் மாயையை அறிந்தும் ஏன் மயங்குகிருய்'' என்று.

இவ்விதம் அறிவிக்கப்பட்ட வாருசி துக்கத்தை உதறி வைராக்யம்பெற்று சகல ஆசைகளையும் துறந்து,சமகுணத்தையே முக்கியமாகக்கொண்டவனுய் தபோவனத்தையடைந்தான். பிறகு சிலநாட்கள்செல்லும்போதுபுண்யமானகாட்டில்வாசஞ்செய்கின்ற வாருசி, தற்செயலாய் மகதகாட்டிலிருந்து வந்த ஓர் பிராமணனி டம் யோகநந்தனின் சமாசாரத்தைக்கேட்டான். அவனும் இவனை அறிந்துவணங்கிச் சொன்னதாவது—'மகாமேதாவியே,நீர் தபோ வனம் சென்றதும் சமயந்தெரிந்துகொண்ட சகடாலன் முந்தின

வைரத்தைநினைத்துக்கொண்டு யோகநந்தனைக்கொல்வதற்கு உபாயத்தைச்சிந்தித்தவனாய், பூமியைத் தோண்டுகின்ற சாணக்கியனென்றபிராமணனைக்கண்டார். 'எதற்காகத்தோண்டுகிறாய்'என்று மந்திரியால் கேட்கப்பட்டபோது,'இந்ததர்ப்பத்தால்என்கால்கீறப்பட்டது. ஆகையால் அத்தர்ப்பத்தை வேருடன் பிடுங்காமல் நகரமாட்டேன்'என்று சொன்னான். 'கொடூரமான நிச்சயங்கொண்ட உதவியான இவனால் எனதெண்ணம் சித்திக்கும்' என்று நிச்சயித்து சகடாலன் அவனை கௌரவப்படுத்தி, தனது வீட்டில் இருக்கும்படி செய்து, நந்தராஜனின் அரண்மனையில் ஒரு லக்ஷம் ஸுவர்ணத்தை தக்ஷிணையாகக்கொண்ட, த்ரயோதசி சிராத்தத்தில், நிமந்திரணம் செய்யப்பட்ட பிராம்மணர்களில் முதல்வனாக அவனைஏற்படுத்தினான். ஆனாலும் அதே முதல்ஸ்தானத்தில்தான் இருக்கிறேனென்று அரசனுக்கு வேண்டிய ஸுபந்து என்ற ஒருவன்கேட்டுக்கொண்டான். அதற்குமுன்பே சாணக்கியன் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் நந்தராஜனால் பலாத்காரமாய் அந்தஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டான்.

பிறகு கோபத்தால் ஜ்வலிக்கின்ற சாணக்கியன், குடுமியை அவிழ்த்து, 'ஐச்வர்ய மதங்கொண்ட இந்த நந்தனை ஏழே நாட்களில் நாசஞ்செய்து இந்தக் குடுமையைக் கட்டுவேன்' என்று பிரதிக்ஞை செய்தான். அந்த சாணக்கியனைத் தனது வீட்டில் ரஹஸியமாக வைத்து, அவனுக்கு வேண்டியவை எல்லாவற்றையும், சகடாலன் கொடுத்துவந்தான். மிக்கக்கோபங்கொண்ட அந்த சாணக்கியனும், உக்கிரமான அதர்வவேதமந்திரங்களால், ஒரு கிருத்தியை என்ற அபிசார தேவதையை வசப்படுத்தினான். அதனால் பிடிக்கப்பட்ட யோகநந்தன் கொடூரமான தாஹஜ்வரத்தால் பீடிக்கப்பட்டு, ஏழாவது நாளில் இறந்தான். சகடாலன் உடனேயே ஹிரண்யகுப்தனைக்கொன்றுமுந்தின நந்தன் பிள்ளையான சந்திரகுப்தனை ராஜ்யத்தில் அபிஷேகம் செய்து, சாணக்கியனையும் மந்திரிஸ்தானத்தில் வைத்து, 'பழிக்குப் பழி வாங்குகிறேன்' என்று பிரதிக்ஞை செய்ததை நிறைவேற்றினாலும் தன்னுடைய பிள்ளைகளின் மரணத்தால் வைராக்கியங்கொண்டு தவஞ்செய்வதற்குப் பெருங்காடு சென்றான்—என்று.

இவ்விதம் அந்தப் பிராம்மணன் மூலமாய் மிகவும் சோகப்படக்கூடிய யோகநந்தனின் வார்த்தையைக்கேட்டு மிகவும் வருத்

தங்கொண்ட வாருசி, உலகவாழ்க்கைப்பயனற்றது என்பதை உணர்ந்து விந்தியவாஸினியான தெய்வத்தை உபாஸித்து, அத்தெய்வத்தின் ஆஞ்ஞையால் புலி, குரங்கு முதலான மிருகங்களால் நிறைந்த பெரிய விந்தியவனத்தில் அலைந்துகொண்டு ஓரிடத்தில் உன்னதமான ஒரு ஆலமரத்தைக் கண்டான். அம்மரத்தின் பக்கத்தில் அனேக பிசாசங்களால் சூழப்பட்ட காணபூதியென்ற வேதாளத்தைப் பார்த்து, உடனேயே பூர்வஜன்ம விருத்தாந்தங்களை நினைத்து, 'குபேரசாபத்தால் பிசாசமாய் இருக்கும் ஸுப்ரதீபகன்' என்ற அவன் புஷ்பதந்தனான தன்னுடைய தோழனான யக்ஷன் என்று நிச்சயித்து அவனிடம் நட்பை வெளிப்படுத்தி வித்தியாதரர்களின் சரித்திரத்தை வர்ணித்து, 'தோழனே சீக்கிரத்தில் இங்கு வரப்போகின்ற குணாட்யனுக்கு அபூர்வமான இச்சரித்திரத்தைச் சொல் அதனால் உனக்கு சாபமோக்ஷம் ஏற்படும்' என்று அறிவித்து தேஹத்தை வடுவதற்கு புண்ணியமான பதரிகாசிரமஞ் சென்றான்.

பனிமலையின் பக்கத்து கானகங்களில் சஞ்சரித்துக்கொண்டு அங்கு கந்தமூலபலாதிகளால் ஜீவித்துக்கொண்டு शाकरस சாகாஸன் என்று பொருள் பொருந்தின பெயர்வாய்ந்த ஒரு முனிவரைக்கண்டான். அவனால் அதிதி ஸத்காரஞ்செய்யப்பட்டு அவரது ஞானத்தைப் பரீக்ஷிக்கவேண்டுமென்ற விருப்பத்தால் தர்ப்பத்தால் கீறப்பட்ட அவரது உள்ளங்கையிலிருந்து ரத்தப் பிரவாஹத்தை சாகாஸமாக மாறினதைக் கண்டான். அவரும் அதைக் கண்டு 'ஸித்தனாய்விட்டேன்' என்று கர்வங்கொண்டார். அப்போது வாருசி, அந்த கர்வமானது அறிவைத் தடைசெய்துவிடுமென்று அவருக்குத் தெரிவித்து,

जिज्ञासनाय रक्तन्ते मया शाकरसीकृतम् ।
यावन्नाद्याप्यहङ्कारः परित्यक्तस्त्वया मुने ॥

ரிஷியே! அறிந்துகொள்வதற்காகவே, உமது உதிரம் என்னால் சாகாஸமாக்கப்பட்டது. இப்போதும் உம்மால் அகங்காரம் விடப்படவில்லை.

ज्ञानमार्गे ह्यहङ्कारः परितोदुरतिक्रमः ।
ज्ञानं विनाच नास्त्येव मोक्षो वर्षशतैरपि ॥

स्वर्गस्तु न मुमुक्षूणामपि चित्तं विलोभयेत् ।
तस्मादहंकृतित्यागात् ज्ञाने यत्नं मुने कुरु ॥

ஞானமார்க்கத்திற்கு அஹங்காரம் தள்ளமுடியாத இடையூறாய் இருக்கிறது. அனேக ஆயிரம் வர்ஷங்களானாலும் ஞானமேற்படாமல் வேறு உபாயத்தால் மோக்ஷம் கிட்டாது. அழிவுள்ள ஸ்வர்க்கமானது முமுக்ஷுக்களான பெரியோரின் மனதைக்கலக்காது. ஆகையால் அஹங்காரத்தை விட்டுவிட்டு, மோக்ஷத்தில் முயற்சி செய்யும்'

என்று மோக்ஷாஹஸ்யத்தை உபதேசித்து வணங்கின அவரால் போற்றப்பட்டு, ஜீவாபிமானத்தைத் துறந்து, அஹங்காரம் விலகி, ஓய்வில்லாமல் நியமத்துடனிருந்ததால் புலன்களின் வழிக்கிடுபடாமல் பார்வதீ தேவியின் சரணகமலங்களைத் தியானித்தும், தீவ்விரமான தவத்தால் ஆராதிக்கப்பட்ட அவ்வுமையின் பிரஸாதமடைந்தும், யோகபலத்தால் சரீரத்தை எரித்தும் கைலாஸநாதனால் கொண்டாடப்பட்ட வரவையுமுடையவராய் வாருசி திவ்யமான கதியைப்பெற்றார்.

வரருசி சரிதம் முற்றிற்று.

K. V. சுப்பிரமணிசாயஸ்திரிகள்

---

# ஸநாதன தர்மம். (2)

சகல ஸநாதன தர்ம ஆஸ்திகர்களுக்கும்
மறுபடியும் விக்ஞாபனம்.

கண்விழியுங்கள் ! நமது கடமை: கண்விழியுங்கள் !!

நம்முடைய பாரதநாட்டிலுள்ள ஸகல ஸநாதனதர்மிகளும் தர்மத்தையும் தங்கள் குலம், கோத்திரம் முதலியவைகளையும் காப்பாற்றிக்கொள்ள இச்சமயம் முயற்சியெடுக்காவிட்டால் சாதுர்வர்ண்யநாசமும் ஸ்திரீகளுக்கு தோஷமும் வர்ணசாங்கர்யமும் குலங்களுக்குக் கேடும் எற்பட்டுவிடுமென்பதில் ஸந்தேஹமில்லை. நம் ஸமூகஸ்வரூபமே கொஞ்சகாலத்தில் அழிந்துவிடுமோ என்ற தோற்றமும் உண்டாகிறது. மனிதர்களாய் ஜனித்த நாம் ஆகாரநித்திராதிகளைமட்டில் கவனித்துக்கொண்டிருப்பது பெரும்

முட்டாள்தனமாய் முடியும். திருவாதியில் 12—1—30ல் கூடின ஸநாதனதர்மஸம்மேளனகாலத்தில் தஞ்சை பிராமணஸபையிலிருந்தனுப்பப்பட்ட விக்ஞாபனப்பத்திரிகைகளில் தெரிவித்துக் கொள்ளப்பட்டபடிக்கும் ஷை ஸம்மேளனத்தில் நாம் தீர்மானங்கள் செய்தபடிக்கும் பிரதி கிராமத்திலும் ஸநாதனதர்மஸபைகள் இதுவரையில் ஏற்படாதிருந்தால் அப்படிப்பட்ட ஸபைகளை இனியாவது உடனே காலவிளம்பமன்னியில் ஏற்படுத்தவேண்டியது அவசியம். திருக்கருகாவூர் மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பய்யாவர்கள் நம் ஜில்லாவில் மிலட்டூர் களஞ்சேரி முதலிய கிராமங்களில் பிரசாரம் செய்து ஸபைகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தப்பிரபுவைப்போல் சிரத்தையுள்ள பலர்கள் கிளம்பி கிராமம் கிராமமாகப் பிரசாரம்செய்தல்வேண்டும். அந்தந்த கிராமங்களிலுள்ள வைதிக சிரத்தாளுவான கிரஹஸ்தர்கள் இந்தவிஷயத்தில் தங்கள் மனதை செலுத்துவார்களானால் அக்நிஹோத்திராதி கர்மாக்களினால் ஏற்படக்கூடிய பலன்களையும் நித்தியமங்களமான ஸ்ரேயஸ்ஸையும் அடைவார்கள்.

த்ரிகாலமறிந்த நம் பெரியோர்கள் संघे शक्तिः कलौ युगे அதாவது கலிகாலத்தில் கூட்டம்கூடி இரைச்சல்போடுகிறவர்கள் பேச்சுத்தான் மேல்கரிக்குமென்று எழுதியிருக்கிறார்கள். அதற்கு உதாஹரணமாகவே இப்போதுள்ள சட்டஸபைகளையும், விஷயத்தில் சம்மந்தமில்லாதவர்களின் பெருங்கூக்குரால் பிரகாரமும் தினசரிப் பத்திரிகைக்காரர்கள் அபிப்பிராயப்படிக்கும் அவைகளில் சட்டங்கள் ஏற்படுவதையும் காண்கிறோம்.

இப்போது பெரிய உத்தியோகப்பதவி அடைகிறவர்களும் சட்டஸபை யங்கத்தினர்களாகப் போய்ச் சேருகிறவர்களும் பெரும்பாலும் ஹிந்துக்கள் என்று பொய்ப்பெயர் பூண்ட (அனிபெஸண்டு அம்மாள் கோஷ்டியைச் சேர்ந்த) தியாஸபிஸ்டுகளாகவும் (Theosophists), ஆர்யஸமாஜக்காரர்களாகவும், பிரமோஸமாஜக்காரர்களாகவுமிருக்கிறார்கள். பின்னும் சில வாயாடிகள் மதக்கொள்கை என்பது அற்று பரலோகசிந்தனையென்பதில்லாமல் வயிற்றுச்சாமியே பெரிதாய்நினைத்து மதாசாரங்களைத்தேசிய நன்மைக்கு இடையூறாய் துராபிப்பிராயங்கொண்டு அட்டகாசம் செய்கிறார்கள். பின்னும் சில சீர்கெட்டவர்கள் ஹிந்துக்கள்போல வேஷம்மட்டில் போட்டுக்கொண்டு எந்த மதத்தைச் சேர்ந்தவர்

கள் எந்த ஜாதி என்று சொல்லமுடியாதபடி 'சீர்திருத்தம்' என்று குதிக்கிறார்கள். இவர்களுக்கு இராஜீக அந்தஸ்து ஏற்பட்டுவிடுவதால் இவர்களின் அபிப்பிராயங்களை ஹிந்துஸமூகத்தின் அபிப்பிராயங்களாக பிரிட்டிஷார் மதிக்க ஏதுவாய்விடுகிறது. ஜயினர்களையும் பவுத்தர்களையும் எப்படி ஹிந்துக்கள் என்று சொல்ல முடியாதோ அப்படித்தானே மேலே சொல்லிய கோஷ்டிக்காரர்களும், ஸமாஜக்காரர்களும். நாம் ஒன்றுசேர்ந்து கதறினால் அல்லவா உலகத்திற்கு உண்மை விளங்கும்.

நம் மதாசாரவிஷயங்களில் நமது மடாதிபதிகளின் அபிப்பிராயங்களை இராஜாங்கத்தார் அநுசரித்தல் வேண்டுமென்று நாம் வற்புறுத்தவேண்டும். பிரிட்டிஷாருக்கு ஸநாதனதர்மிகளிடத்தில் என்ன விரோதம்? ஒன்றுமில்லையே! நம்மதத்தைவிட்டுப் போயும் கூட நம்மைச் சேர்ந்தவர்களாக உறவாடுகிற மேலே சொல்லிய தியாஸபிஸ்டு கோஷ்டிக்காரர்களும், ஸமாஜக்காரர்களும் நாஸ்திகர்களாகவும் மனம் போனபடி நடக்கிறவர்களாகவுமிருந்துகொண்டு நம் சமூகத்திலிருக்கிறவர்களுமான நம்மவர்களே நம் சத்துருக்கள். கிறிஸ்தவர்களாய்ப்போன பிராமணர்கள் பூணூலை விடாமல் தரித்துக்கொண்டிருப்பதையும்நெற்றிக்கிடுவதையும் தனித்தெருக்களில் வசிப்பதையும் அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட கிருஸ்தவர்களை பிராமணர்கள் என்றாவது, ஹிந்துக்களென்றாவது சொல்வார்களா? கவனிக்கவேண்டும். இப்போதுள்ள இராஜாங்கமுறையிலோ ஜனங்களுக்கு ஸமூகஅபிப்பிராயத்திலிருந்து பயமோ ஸங்கோசமோ இல்லாமல் போய்விட்டது. எவனைக்குறித்தும் ஒரு ஸமூகத்தில் சேரத்தகுதியற்றவனென்று சொல்லிவிடமுடியாது. அப்போதுமட்டும் மானநஷ்டமென்று சொல்லிவிடுவார்கள். எந்த உண்மையான வேறு கொள்கைக்காரர்களையும் தூஷிக்கவாவது துவேஷிக்கவாவது நாம் வரவில்லை. நம் ஸமூகத்திலேதானே இருந்துகொண்டிருக்கிற போலிஹிந்துக்களைப்பற்றி நம் ஸமூக நன்மையை உத்தேசித்துச் சொல்லலாயிற்றேதவிர வேறல்ல.

இத்தகையஸ்திதியில் நம்காரியத்தை நாம்பார்த்துக்கொள்ள வழியொன்றுதான். காங்கிரஸ்கக்ஷி தற்காலத்தில் என்ன வலிமை அடைந்துவிட்டது. பாருங்கள். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.' பிரதிகிராமத்திலும் ஸநாதனதர்மஸபைகளை ஏற்படுத்த வேண்டியது. ஒவ்வொரு தாலூகா அல்லது ஜில்லா தலைநகரிலும்

அதேமாதிரி ஸபை ஏற்படுத்தி அதற்கு அவைகளைக் கிளைகளாக வைத்துக்கொண்டு சென்னை முதலிய இடங்களிலுள்ள மாகாண ஸபைகளோடு சேர்த்து எல்லா மாகாண ஸபைகளையும் அகில இந்தியா ஸநாதனதர்மஸபைக்குள்ளாக்கி எல்லோரும் ஒன்று சேர்ந்து அடிக்கடி முறையிடுவதுதான் வழி.

இந்த விஷயத்தில் அதிக திரவியச்செலவாவது தேகசிரமமாவது கிடையாது. அடிக்கடி கூடுவதும் நம்மபிப்பிராயங்களை ஸர்க்காருக்கு தந்தி தபால் மூலமாய் தெரிவிப்பதும் கூட நம்மால் சாத்தியமில்லையானால் நம் வாழ்க்கையென்னப் பிரயோஜனம்? ஹிந்து, சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகள் பிரசாரத்திற்கு தற்சமயம் நமக்கில்லாதது ஒரு பெரும் குறைவுதான். அதற்கும் சில கனவான்கள் பிரயத்தனமெடுத்திருக்கிறார்கள். இப்போது ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளை வாங்கி வாசிக்கின்ற கனவான்கள் ஸர்வம்போடு ஸநாதனதர்மத்தையும்சேர்த்து பிரசுரிக்கிற பத்திரிகையைத்தான் வாங்குகிறது என்று பிடிவாதமாயிருப்பார்களானால் அந்தப்பத்திரிகை முன்னுக்கு வந்துவிடும்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்ரீமத்கீதையில் வாக்களித்திருக்கிறபடி தர்மநாசத்தை ஒழிக்க பகவான் அதிசீக்கிரத்தில் அவதரிப்பார். ராக்ஷஸர்கள் பிராமணர்களைக்கொன்று போர்போராய்ப் போட்டிருந்ததை மகர்ஷிகள் ஸ்ரீ ராமபிரானிடம் காட்டியதை ஸ்ரீமத்ராமாயணத்தில் நாம் காண்கிறோம். அப்படிப்பட்ட ராக்ஷஸர்களை ரக்ஷித்து தர்ம சம்ஸ்தாபனம் செய்த ஸ்ரீ மஹாவிஷ்ணு எங்கே போய்விட்டார்? ராவணாதிகள் செய்துவந்த அக்ரமங்களை தேவாதிகள் எப்படிக்கதறி முறையிட்டு கார்யசித்தியடைந்தார்களோ, அதுபோல நாமும் கதறவேண்டும். நாம் ராஜவிசுவாசமுள்ளவர்களானதாலும் இராஜா மஹாவிஷ்ணு அம்சமென்பது நம் கொள்கையானதாலும் நம் கதறல் காதில் விழும். நல்ல காலம் பிறக்கும்.

எதற்கும் புருஷப்பிரயத்னம் அவசியம். நாமும் இயன்றமட்டில் நம் தர்மங்களை நம்பிக்கையோடு அனுஷ்டிக்கவேண்டும்.

| | |
|---|---|
| தஞ்சாவூர்<br>பிரமோதூத-ஹு<br>சித்திரை-மீ | தஞ்சைஜில்லா பிராமணர் ஸநாதன<br>தர்ம சம்ரக்ஷண ஸபை. |

# ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்

## பிரமோதவருஷத்திய ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவ

# வேதாந்தஸபா பிரகடனப்பத்திரிகை.

ஸ்ரீகைலாஸவாஸியான பரமேசுவரன் பிரம்மாதி தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி லோகக்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்ய வேண்டி, சுமார் 2500வருஷங்களுக்குமுன் இப்புவியில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீகைலாஸபதியே மானிட உருவந்தாங்கி ஸ்ரீசங்கரபகவத்பாதாளாய் அவதரித்து தேசமுழுவதும் திக்விஜயம் செய்து அனேக துர்மதங்களைக் கண்டித்து ஷண்மதஸ்தாபனஞ்செய்து அத்வைதமதத்தை நிலைநாட்டி, உத்தமமான பல க்ஷேத்திரங்களில் யந்திரஸ்தாபனஞ்செய்து கடைசியில் மோக்ஷநகரில் ஒன்றாகிய ஸ்ரீகாஞ்சீ க்ஷேத்திரத்தை அடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீ சக்ராகாரமாய் நிர்மாணம் செய்து, பிந்துஸ்தானத்தில் ஸ்ரீகாமகோடிபீடத்தை ஸ்தாபனம்செய்து ஜகதம்பிகையான ஸ்ரீகாமாக்ஷிதேவியின் ஸன்னிதானத்தில் ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்தும் ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்தும், இன்றைக்கும் நமது பாரதபுண்யபூமியிலுள்ள அனேக க்ஷேத்திரங்களில் அர்ச்சாவதாரரூபராய் விளங்கிக்கொண்டு பக்தகோடிகளுக்கு அனுக்ரஹம் புரிந்துவருவது யாவரும் அறிந்த விஷயம்.

அப்பேர்ப்பட்ட ஸ்ரீபரமாசார்யாளுடையஅவதாரதினமாகியவானது ப்ரமோதஹு சித்திரை மீ 21உ (3—5—30) ஸ்திரவாரம் முதல் சித்திரை மீ 30உ (12-5-40) சோமவாரம் முடிய ஸ்ரீகாமாக்ஷியம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமத் ஆசார்யபகவத்பாத மூர்த்தியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளின் அவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு பிரதிதினம், வேதபாராயணம், உபநிஷத்பாராயணம் ப்ரஸ்தானத்ரய பாஷ்யபாராயணம், மஹந்நியாஸஜபம் முதலியதும் காலைமாலைகளில் விசேஷபூஜை அர்ச்சனை அபிஷேகம் முதலியது நடத்தி ஸ்ரீ பரமாசாரியமூர்த்தி ஸாயங்காலத்தில் பிரகாரப்ரதக்ஷிண உத்ஸவமும், உபந்நியாஸங்களும் பூர்த்தி தினமாகிய சித்திரை மீ 30உ சோமவாரத்தன்று ஸ்ரீ அம்பாளுக்கும் ஸ்ரீ ஆசார்யமூர்த்திக்கும் ஸகலஸன்னாக வைபவங்களுடன் ராஜவீதியில் வீதிப்ரமண மஹோத்ஸவ உத்ஸவம். இவ்விதம் ஸ்ரீமத்ஆசார்யஜயந்திமஹோத்ஸவம் நடைபெறுவதோடு சித்திரை மாதம் 28உ (10-5-30) ஸ்திரவாரம் முதல் 30உ (12-5-30)சோமவாரம் முடிய மூன்று தினங்கள் காஞ்சியில் ஸ்ரீ சங்கராசார்யசுவாமிகள் அவர்கள் ஸ்ரீமடதில் வேதாந்த வித்வத் ஸதஸ்ஸும் நடத்துவதாய் நிச்சயமாயிருக்கிறது. ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் ஷை மஹோத்ஸவகாலத்தில் ஸ்ரீமத் ஆசார்யமூர்த்தியைத் தரிசித்தும் வித்வத்ஸதஸ்ஸில் பண்டித உத்தமர்கள் நடத்தும வாக்யார்த்த ஸத்விஷய உபந்நியாஸாதிகளை சிரவணம் செய்தும் ஸ்ரீ பரமாசார்ய பூர்ணானுக்ரஹபாத்திரராய் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய் க்ஞாபிக்கப்படுகிறது.

T. S. ராஜுஅய்யர்,
மானேஜர், ஸ்ரீகாமாக்ஷியம்பாள் தேவஸ்தானம்,
காஞ்சிபுரம்.
(30—4—30.)

K. குப்புஸாமி அய்யர்,
ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள் தேவஸ்தானம் ஆதீனபரம்பரை தர்மகர்த்தா அவர்களாகிய ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம் ஏஜண்டு, (கும்பகோணம்.)